உ

ஸ்ரீ கருணாநிதி துணை.

திருவாரூரைச் சார்ந்த வன்மீகபுரம்

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி

ஷோடச கலாமாலை.

இஃது

மாயூரத்தைச் சார்ந்த கூறைநாடு

— ரஞ்சித மோகந கவி —

பாகவதர் K. தியாகராஜ தேசிகர் அவர்களால்

இயற்றப்பட்டு,

பப்ளிஷர்

திருவாரூர்—ஸ்ரீநிலயம்

திருக்கோட்டாறு. ஸ்ரீமாந் T. V. சாமிநாத முதலியார்

ராயப்பேட்டை

ஐ. ராதாகிருஷ்ண ஐயர் கம்பெனியாரால்

திருவல்லிக்கேணி, கல்வி பிரகாசம் பிரசில் பட்டில்

அச்சிடப்பட்டது.

விலை அணா 8.

023:4198
M23.
17984

உ

ஸ்ரீ கருணாநிதி துணை.

திருவாரூரைச் சார்ந்த வன்மீகபுரம்

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி

ஷோடச கலாமாலை.

இஃது

மாயூரத்தைச் சார்ந்த கூறைநாடு

— ரஞ்சித மோகன கவி —

பாகவதர் K. தியாகராஜ தேசிகர் அவர்களால்

இயற்றப்பட்டு,

பப்ளிஷர்

திருவாரூர்—ஸ்ரீநிலயம்

திருக்கோட்டாறு. ஸ்ரீமாந் T. V. சாமிநாத முதலியார்

ராயப்பேட்டை

ஐ. ராதாகிருஷ்ண ஐயர் கம்பெனியாரால்

திருவல்லிக்கேணி, கல்வி பிரகாசம் பிரசில் டைடில்

அச்சிடப்பட்டது.

காபிரைட்]

விலை அணா 8.

பிழைதிருத்த அட்டவணை.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	19	இடர்ளை	இடர்களை
9	8	சிகாமணியெ	சிகாமணியே
,,	21	வேண்டேன	வேண்டேன்
15	12	மானிலமே	மானிலமெ
19	8	சுந்தனையு	சிந்தனையு
,,	9	சுத்கநா	சித்கநா
21	18	துவா	தூவா
24	25	வார்த்தையிலை	வார்த்தையில்
30	23	தலிக்கிறே	தவிக்கிறே
36	19	வேயளை	வேயலை
,,	26	பாதகந்தணிலே	பாதகந்தனிலே
38	19	கந்துமலர்ப்	கந்தமலர்ப்
,,	22	எனனை	என்னை
40	21	ஞாவமு	ஞானவமு
,,	26	பெரல்லாத	பொல்லாத
41	20	சேயேவென	சேயேனென
,,	22		குமன்றேகமே
,,	27	சரணாநிதி	சரணாகதி
42	18	ணாவிந்தம	ணாரவிந்தம
45	23	தரிந்து	தரித்து
46	21	மணைவி	மனைவி
49	14	தோரான்	தேரான்

வன்மீகபுரம் ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள்.

உ

வேலுமயிலுந் துணை.

முகவுரை.

ஸ்ரீமதகண்டாகார சச்சிதாநந்த சுத்தஷாட்குண்ய பரிபூரண பரங்கருணைத் தடங்கடலாகிய சிவம்தனது அபின்னசித் சக்தியோடும், ஸகளீகரித்து அநாதி முக்தனு யெழுந்து அநாதிபத்தர்களாயுள்ள ஜீவகோடிகள் தன்னை யுபாஸித்து பந்தத்தினின்று நீங்கியுய்யும் பொருட்டு வேதாகமங்களை யருளிச் செய்தும் பின்னர் உலகத்தில் புண்ணிய நதி தீரங்களில் அநாதியாயுள்ள க்ஷேத்ரங்களில் ஸகளநிஷ்கள ஸ்வரூபமாய் திருக்கோயில் கொண்டெழுந்தருளியும் பின்னரும், தனது, கருணையே வெளிவந்த தொப்ப, பரசமய கோளரிபாயும் சைவமத ஸ்தாபகராயும் தெய்வீகத் தருள்வடிவாய் ஸ்ரீஞானசம்பந்தாதிய நால்வர்களாய் வெளிவந்ததும், அன்றி ஆதிசங்கரர், நீலகண்டர், மெய்கண்டார், தாயுமானவர், பட்டினத்தடிகள், என்னும் ஞானகுரு மூர்த்தங்களாயும் எழுந்தருளி யிவ்வுலகிலெங்கும் பரவத்தக்க வனேக திருவருட்டிறமாய வற்புதச் செயல்களைக் காட்டியருளியவர்களைப் போலும் நமது வன்மீகபுரத்திற் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீகுரு தக்ஷிணாமூர்த்தியும் ஒருவரென்பது திண்ணம். மேலும், நமது ஸ்வாமிகள் கீழாலத்தூரில் தெய்வீகத்தருள் வடிவாய் ஜீவன் முக்தராய் அவதரித்து வளர்ந்து ஓதாதுணர்ந்து சிவானுபோகச் செல்வீகராய் தனது திருவருளினுல், அனேக அற்புதங்களைச் செய்து, தன்னையடுத்த அடியவர்களின் இடரினை நீக்கினதுமன்றி, பலர்களுக்கு, நோய் விஷத்தீமை, சங்கை முதலியவைகளையுமாற்றி சிவாநந்த யோக நிலையில் வாழ்ந்து பிறகு, விதேக முத்தியடைந்து வன்மீகபுரத்தில் ஸகள நிஷ்கள வடிவாய் எழுந்தருளிய வைபவம், யாவருக்கும், நன்கு புலப்பட்டதேயாம். நிற்க கு. குகாம் என்னும்,மாயாபாசபந்தத்தை ரு. ருகரம். என்னும்ஞானகட்கத்தால் அறுத்து பேரின்பத்தை நத் திருவருள் செய்யவல்ல, காரணத்தானே குருவாயெழுந்தருளிய. நமது தக்ஷிணாமூர்த்தியை, அடியேன் திரு

வாரூருக்குப் பற்பல தடவை வந்து போகியும் தரிசித்தவனல்லேன் அதைநோக்க, என்தீவினையேபோலும். ஆயினும், ஓர்கால் சிதம்பரம் பிரும்ஹஸ்ரீ ஸ்ரீரங்காசாரியார், அவர்களும் திருவாரூர். வக்கீல் பிரும்ஹஸ்ரீ N. மஹாதேவ அய்யர் அவர்களும் திருக்கோட்டாறு. ஸ்ரீமாந் சாமிநாத முதலியார் அவர்களும், நமது, குருமூர்த்தியின் வைபவத்தை அடியேனுக்கு எடுத்துச் சொல்லியதுமன்றி ஸ்வாமிகள் சரித்திர வாலாறு அமைந்த ஓர் புத்தகமும் கொடுத்தார்கள். படித்துப் பார்த்து மிகமகிழ்ச்சியுற்று ஓர்நாள் குருமூர்த்தியைச் சென்று தரிசித்தும் வந்தேன். பிறகு ஏதேனும், ஸ்வாமிகள்மீது ஓர் பாமாலையியற்ற வேண்டி நினைத்த எனதுள்ளக் கருத்தை யுணர்ந்த ஸ்ரீமாந். சாமிநாத முதலியார் அவர்களு மிணங்கினார்கள். குருநாதன் திருவருளான ஆக்ஞையும் முன் நின்றது. ஆகையால் சிற்றறிவுடையயான் யியற்றிய இச் "சோடசகலா மாலையில்" உள்ள குற்றங்களை நீக்கி குணத்தை மாத்திரங் கைக்கொண்டு அன்புபாராட்டுவதே அறிவுடையார் அடியேற்கு செய்யவேண்டிய பேருதவி. மேலும் "நல்லார் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து - கல்லார் பிறர்குற்றங் காண்பரோ அல்லாத - என்போல்வா ரென்னை யிகழ்வரோ வெண்கவிக்குப் பின் பாரோ சொல்வார் பிழை" யென்பது இவ்விடத்து உணர்ந்தறியத் தக்க ஆன்றோர் மொழி.

"இந்நூலை அச்சிடுவதற்கு உடன் நின்று முயற்சித்து முற்றுவித்த எனது நண்பர் திருவாரூர் ஜவுளிக்காரத் தெரு T. S. மஹாதேவய்யர் அவர்களுக்கு எந்நாளும் நன்றியறிதலுள்ளவனாகும் கடமையில் வந்தனமளிக்கின்றேன்." சுபம்.

இப்படிக்கு :

K. தியாகராஜ தேசிகர்.

கூறைநாடு.

சிதம்பரம்

பிரும்ஹஸ்ரீ, பாகவத சிகாமணி

எம்பார். ஸ்ரீ ரங்காசார்யார் அவர்களால்

எழுதப்பட்டது.

ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் க்ஷேத்ரத்திற்குத் தென் மேற்கி லுள்ள வன்மீக புரத்தில் சிவராஜ யோகச் செல்வராய் ஸமாதி கொண்டெழுந்தருளி விளங்குகிற ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தியின்மீது ஸ்ரீ கௌரி மாயூரத்தைச் சார்ந்த கூறைநாடு தமிழ்வித்வான் ஸ்ரீலஸ்ரீ அ. கந்தஸாமி தேசிகர் அவர்கள் குமாரரான, சிரஞ்சீவி ரஞ்சித மோகநகவி ஸ்ரீமான் தியாகராஜ தேசிகர் அவர்களால் இயற்றப்பட்ட "ஷோடசகலாமாலை" என்னும் நூல் சொற்சுவை பொருட் சுவை முதலிய அணிகள் நிரம்பியதாயும் சைவமத சாஸ்த்ர நுட்பங்கள் பொருந்தியதாயும், குருலிங்க சங்கம பத்தியை அடைவதற்குக் காரணமாயும் உள்ளதென்பது எனது துணிபு. அன்றியும் இந்நூலைப் படிக்கிறவர்களுக்கும் கேட்பவர்களுக்கும், ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி யின் திருவருள் கைகூடுமென்பது திண்ணம். மேலும் இந்நூலில் 15-வது செய்யுளில் நீண்ட நாள் ஓர் நல்லாசிரியருக்கு வழிபட்டு கேட்கவேண்டிய சிவானுபோகஸோபான மார்க்கங்களைத் தெளிவாய் அடக்கிச் சொல்லியிருப்பது ஞானிகளாலேயே மெச்சத் தகுந்ததே யாம்.

இந்நூலை இயற்றி வெளியிட்ட தியாகராஜ தேசிகருக்கு ஸர்வ மங்களமும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் செய்வாராக.

இப்படிக்கு,

எம்பார்,

பாகவதர் - ஸ்ரீ ரங்காசாரியார்.

திருவாரூர் - வக்கீல் பிரும்மஸ்ரீ,

N. மஹாதேவ அய்யர் அவர்கள்

அபிப்ராயம்.

திருமகள் தவஞ் செய்தமர்வதும் பிறந்தவர் பிறவாப் பெரும் பயன் பெறுவது மாகிய திருவாரூரென்னுஞ் சிவஸ்தலத்திற்குத் தென்மேற்கிலுள்ள வன்மீக புரத்தில் சிவயோக ஸமாதி கொண் டெழுந்தருளும், ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தியின் மீது மாயூரத்தைச் சார்ந்த கூறைநாடு - ரஞ்சிதமோகநகவி - பாகவதர் - K. தியாகராஜ தேசிகர் அவர்களால் இயற்றப்பட்ட ' சோடச கலாமாலை" முதலிய நூல்கள் முழுதும் பார்வை யிட்டேன். அவை ஸ்ரீ ஸ்வாமிகளின் அற்புதங்களைத் தெரிவிப்பதோடு, "கலியுகவைபவத்தில்" தற்காலத் தவரியற்கையும் குணவேற்றுமையும் செவ்வையாய்ப் புலப்படுத்து வது மல்லாமல் எல்லோருக்கும் நல்லறிவு கொடுத்து பக்தியை மிகு விக்கு மென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இப்படிக்கு: வக்கீல்,

N. மகாதேவய்யர், ஸ்கந்த நிவாஸம்,

திருவாரூர், 8—4—23.

ஸ்ரீ கௌரி மாயூரம் முனிஸிபல் உயர்தரக் கலாசாலை
தலைமைத் தமிழ்ப் போதாகாசிரியரும்
முத்தமிழ் வித்வானும்
ஆகிய
ஸ்ரீமாந். S. வேலாயுத முதலியார் அவர்கள் இயற்றிய

சிறப்புப் பாயிரம்.

திருவளர் தெய்வச் செழும்பொருள் கொழிக்கு
மருமலர்க் கமலைத் திறம்பெறப் பொதுளு
மெய்ம்மொழிப் புலவன் செய்ம்முறை நிறீஇ
யெப்பொரு டனக்கு மொப்பில தாய
வெல்லாம் வல்ல நல்லான் றிருவருட்
கைவர வாயிர மொய்ம்மலர்க் கஞ்ச
முகிழ்த்தளி சுரக்க நிகழ்த்திடு மெல்வை
மேலவன் சோதனை யாலொன் றெஞ்சப்
பண்ணிய புண்ணிய முண்ணல மில்லெனக்
கண்மல ரொன்றைக் களைந்தர் சித்துப்
பண்பல பாடிப் பரசிடு திருமாற்
பின்னரு நன்னல மன்னுவா னுன்னித்
தனதிக யத்து வனசத் திருத்தி
பூசனை யாற்றிடு மாசிலா மாண்பு
துன்றிய நகரா மன்றியு நீதிச்
செங்கோ னறநெறி யெங்கணும் பரவ
அவாநிலை யுந்தத் தவாது புரக்கு
மனுச்சோ ழன்முசு குந்த மன்னவர்
எண்ணில ராகி நண்ணுபு மாகனத்
தவந்தரு தியாகச் சிவம்வளர் ஆரூர்
தம்பதி தென்பா லின்புறப் பண்டு
தேங்கமழ் கொன்றை போங்குறு மிறைவன்

பொய்யில் புலவ ருய்தரக் கொளீஇத்
திருவிளை யாடல் பெருகுறு மொன்றாப்
புற்றுரு வெய்திய புரமெனுந் திருப்பேர்
உற்றிடுந் திருத்தளி யோங்குபு பதிக்கண்
ஆணவ மிரித்தம் மாணெறி தழீஇ
மெய்த்தவ விழைவிற் கைத்தல மேந்து
மந்தயில் சீர்த்தி முந்துறத் தரூஉம்
ஆர்த்திகொள் தக்ஷிணா மூர்த்தியின் கழற்காம்
பத்தித் தெளிநிலை யெத்தவ ரும்பெற
நான்மலர்க் கதம்ப மேம்படு மெழிலாய்ச்
சோடச கலாவாப் பாடலா மலங்கற்
றொடுத்தணிந் தனனவ னூர்கொல் லெனினிவண்
பொய்கண் டகற்று மெய்கண் டான்வழி
வந்தருள் சீலம் வாய்மை யடக்கம்
நந்தலி லாகம நவில்தரு தமிழ்மறை
யாதிய பனுவ லோதிடு மூக்கமும்
முப்பொரு ளுண்மை செப்பிடுங் கல்வி
கேள்வி யாதி யாள்வினை முற்றுஞ்
சைவ நீணெறி கைவரக் கண்ட
கூறையம் பதியினி னேருறுங் கந்த
சாமித் தேசிகன் றருமருட் சேயன்
முத்தமி ழிலக்கண முறைநெறி யுணர்ந்து
வித்தக ருள்ளம் விழைவுறக் களிக்க
வின்னிசை கூட்டுஞ் சொன்னல வாணன்
நற்றமிழ்க் கீர்த்தனம் பெற்றான் சாம்பான்
தொல்சீர் சரிதந் தொகுத்தினி தளித்த
விற்பன விதரண சற்குணச் சதுரன்
ரஞ்சித மோகனச் செஞ்சொற் கவியன்
தியாகரா ஜப்பேர் தேசிகன் மாதோ

S. வேலாயுத முதலியார்.

கணபதிதுணை

பிரும்ஹஸ்ரீ. K. M. சிதம்பர பாரதியார் அவர்கள்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
கெவர்ன்மெண்டு ஹைஸ்கூல் திருவாரூர்.

சிறப்புப் பாயிரம்.

திருமக டவஞ்செய் திருவாரூரின்
றென்மேற்காகத் திகழ்வன்மீக
புரமெனுந் தலத்துப் புண்ணியப் பயனாய்
உலகோர் குறைக ளொழித்தருள் புரிவான்
சமாதிகொண் டருளுந் தக்ஷிணா மூர்த்தியாங்
குருவினருட்செயற் கூறற்கெளிதோ
பூமுடி யேந்தும் புயங்கம் புகறற்
கொண்ணாப் பெருமை யுறுமம் மூர்த்திமேல்
ஆறுடனொருபா னமைகலா மாலையுஞ்
சந்தமிகுந்த சந்தச் செய்யுளும்
இசையொடுதாள மியைகீர்த் தனங்களும்
சிந்தொடு பலவகைச் செய்யுளு மியற்றினன்
அன்னவனியாரெனி னழகார் கூறை
நாட்டில்வாழ நற்றமிழ்ப் புலவன்
குறுமுனியுததி குடித்தது போல
ழத்தமிழாய முந்நீருண் டவன்
சைவ சித்தாந்தச் சலதிமுற்றும்
பருகிப் பிரசங்கம் பண்ணுஞ் சிங்கமாம்
கந்தசாமிப்பேர்க் கவியிறை செய்தவத்
தீன்றரு ளேந்த லிசையிலிணையிலான்
இயலிசைநாடக மெனுமுத் தமிழ்தேர்
பாவலனுவலர் பரவும் பண்பான்
சொல்லொடு பொருளின் சுவைமிகத் தோன்றவும்
மங்கலச் சொற்கள் மல்கவு மினிமை
பயப்பவுமாய பாக்கள் புனைதலில்
இவற்கொப்பாவோ ரெவருமிலரெனச்
சாற்றத்தக்க சதுரன்மதுர

வாக்குடைக் குரிசில் மலேயிறை மகளமர்
பாகத்தொருவன் பாதம் போற்றும்
தியாகராஜ தேசிகன்
எனுநற் பேர்பூணிருந் தமிழ்ப் புலவனே.

ஷை, பாரதியார் அவர்கள்,

இந்நூல்,

அரங்கேற்றத்தைக் குறித்துச் சொல்லியது

துந்துபியா மாண்டுசுரு மதியமிரு பானுறிற்
சோதி சேரும்
அந்தாநாட் டாராசாற் சூரியதினஞ் சப்தமியி
லகிலத் தோர்க்குச்
சிந்தைவிழை வினையருளுந் தக்ஷிணு மூர்த்தியின்மேல்
தியாகராஜச்
செந்தமிழான் சோடசக லாமாலே யரங்கேற்றிச்
சிறந்திட்டானல்.

இந்நூலே அச்சிட்டுதவிய.

திருக்கோட்டாறு ஸ்ரீமாந் T. V. சாமிநாதமுதலியார் அவர்கள்மீது

இந்நூலாசிரியர்.

K. தியாகராஜ தேசிகர் அவர்கள் இயற்றிய

ஆசிரிய விருத்தம்.

சீர்மருவு தொண்டைமண் டலமதனி லாற்றூர் சிறந்தநாட் டயனபுரமே
திகழும்பு ழற்கோட்ட மழியாமொ ழித்தலேவர் செப்பருந் தூய கோத்ரன்
சேக்கிழார் மரபினன் றிறவயித் தியலிங்க செம்மலுக் கரிய புத்ரன்
செந்திருக் கோட்டாறெனும்பதிய னெழில்வளச் செங்கமலே நகர்நிவாசன்
பார்மருவு சைவதில கன்பரம பக்திமான் பகர்கல்வி செல்வ யோகன்
பன்னும்பு ராணகா வியஸார சேகரன் பரிவுமிகு தர்ம சித்தன்
பரிதிமா றிடினுமொழி மாறுத வன்ப்ரபல பரிஜன சமூகசுகுணன்
பாங்குறுமி ராஜாங்க வுத்யோக முடையபற் பலருக்குமுரிய மித்ரன்
ஏர்மருவு பெட்டிவண் டிக்குதிரை பீடஞே டேறுதண் டிகைவிநோதன்
இன்பசங் கீதரச ஞானலோ லன்புகழி லங்குசற் சனசலாபன்
எத்திறத் தோருக்கு மொப்பநட் புற்றுவா ழினிய மொழி விநயசதுரன்
ஈதலொடு நல்லொழுக் கம்பொறுமை யாதிக ளியற்கையி லமைந்த புண்யன்
நார்மருவு குகனடிமை யாந்த்யாக ராஜநய ரஞ்சிதகவிக் குதாரன்
நாற்றிசையி லும்பூமி போற்றமரு வுஞ்சாமி நாதவர நாமவள்ளல்
நாடியிச் சோடசக லாமாலே தனையச் சினுட்டிவெளி யிட்டெவர்க்கு
நல்கினு னிதில்வரும் புண்ணியம் பெற்றெந்த நாளுமே வாழ்கமாதோ.

உ

பரமபதி துணை.

இந்நூல் இயற்றினருக்குத் தந்தையாரான
தமிழ்வித்வான் சித்தாந்த ரத்நாகரம்
மெய்கண்டார் அ. கந்தஸாமி தேசிகர் அவர்கள் இயற்றிய
ஸ்ரீகுரு தக்ஷிணு மூர்த்தி

பஞ்சரத்நம்

---

1. உன்மனைக்கு மேலா யுறுசிவத்தி லொன்றிரண்டாஞ்
சின்மயத்து ஞான சிகாமணியெ—வென்மனத்துன்
பாதாரவிந்தம் பரிமளிக்க வந்தருளைத்
தாதாநீ சற்குருநா தா

2. முப்பொருளு முக்குணமு முப்பாழு மூண்டவெளிக்
கப்பாலுங் கண்டுகுரு வானவனே—விப்பாரில்
வந்தினிமே லும்பிறவா வண்ண மெனக்கருளைத்
தந்தினிய பேரின்பந் தா

3. தேனும் பசும்பாலுஞ் செங்கரும்பின் றீஞ்சுவையும்
வானமுது மொன்றாய் வருங்குருவே—வீன
வெரிசனத்தா ரோடு மிணங்காம லுந்தன்
தரிசனத்தை யெந்தனுக்குத் தா

4. ஞான விளக்கை நடுப்புருவத் திற்கொளுத்தி
மோன மடைந்த முதுகுரவ—வானின்
பதாநந்தம் வேண்டேன பகாரிதா முந்தன்
சதாநந்த வாழ்வெனக்குத் தா

4. ஞான சோதிச் சுடர்ப்பிழம்பைக் கண்டறியு
மாணர் குருவேவென் வாணளில்—வீணைப்பன்
ணட்கழிந்த தாணு நாயே னினியுனது
தாட்கடிமை செய்பணியைத் தா

உ

சிவமயம்

வன்மீகபுரம்

ஸ்ரீகுரு தக்ஷிணாமூர்த்தி ஷோடச
க லா மா லை

வாதாவிகணபதி

வெண்பா

சீரார்வன் மீகபுரஞ் சேர்தக்ஷி ணாமூர்த்திப்
பேராற் றமிழ்மாலை பேசுதற்கு—நாரார்ந்த
வாரணமே கூறிடுமூ லாதார வாதாவி
வாரணமே யென்னுளத்தில் வா

கலைமகள்

வெண்பா

வித்தகியே வேத விபினமயி லேஞான
புத்தகியே கானரசப் பூங்குயிலே—முத்தமிழ்தேர்
வெண்பங் கயப்பூவில் வீற்றிருக்கு மெல்லனமே
கண்பங் கயங்கணித்துக் கா

முருகன்

முக்கனிவெண்பா

பூவிருக்க நாரிருக்கப் பொற்பா ரருணகிரி
பாவிருக்க நாவிருக்கப் பண்ணிருக்கத்—தேவருக்கு
மூவருக்கு மேலோன் முருகன்பொற் றாளிருக்க
யாவருக்கும் யாவுநல னும்

வாயிருக்கக் கையிருக்க வாழ்த்தியருச் சிக்காது
நீயிருக்க லாமோ நினையாமற்—றாய்முருகன்

காலிருக்கப் பச்சைக் கலாப மயிலிருக்க
வேலிருக்க வேண்டுவதென் வேறு.

வள்ளிதெய்வ யானையொடும் வண்ணமுக மோராறும்
புள்ளிமயி லும்பன் னிருபுயமும்—விள்ளுமலர்க்
காலுங் கடம்புங் கதிர்வேலுஞ் சேவலுமெக்
காலுமற வாதென் கருத்து.

விண்ணப்பம்

மாட்சியுட னெற்குவளர் வாணாள்செல் வங்கல்வி
யாட்சிநல மெல்லாங்க டாக்ஷித்துன்—காட்சியருள்
அற்பகலுஞ் சிந்தித்தே னையகரு ணாநிதியே
கற்பகமே யென்னாளுங் கா.

சிவமயம்.

வன்மீகபுரம்

ஸ்ரீகுரு தக்ஷிணாமூர்த்தி ஷோடசகலாமாலை.

நூல்.

புகழோங்கி யுலகெங்கு மகிழோங்கி வாழவே
புகலரிய வேதாகமப்
பொருளாய முழுமுதற் பரசிவத் தருளினாற்
பொருவின்மூ லாதாரமாய்
நிகழும்பி றப்பினான் முத்தியைய ளிப்பதாய்
நெடுமால ருச்சைசெய்த
நிமலத்தி யாகனைக் கொடுவந்து முசுகுந்தன்
நிலைபெறச் செய்ததலமாய்ப்
பகரரிய கமலையுந் தவமுறக் கமலையம்
பதியெனப் பேர்பெற்றதாய்ப்
பைந்தமிழ்த் தொண்டருக் காகபர மன்செய்த
பலவற்பு தங்கள்நாளுந்
திகழும்வன் மீகபுர மதனிலரு வுருவமாய்த்
திருவருள்வ ழங்கவந்த
சித்கா னந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 2

கண்ணைமூ டிக்கொண் டிருப்பதே னெனவுந்தை
கண்டுகேட் டிடவதற்குக்
காரணஞ் சும்மாயி ருக்கிறே னென்றவுன்
கட்டுரைப் பொருளென்னவோ
எண்ணில்கலை கற்றநீ பள்ளிக்கு வருவதே
னென்றவா சிரியனுக்கு

விங்குசும் மாவந்து போகிறே னென்றசொற்
கினியவுட் பொருளென்னவோ
அண்ணலே யெங்குநிறை வாகநீ யும்யானு
மமைவதெப் படியெனக்கேட்
டடையுமஸ் தானுக்கு வதுவிதநீ நானென்னு
மச்சுட் டிறந்துநின்றாற்
றிண்ணமா யெங்குநிறை பொருளாக லாமென்ற
செஞ்சொலின் பொருளென்னவோ
சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 3

ஒப்பிலாத் திருவரங் கத்தினிற் கொட்டகையி
னுச்சியிலி ருந்துவீழ
முனதன்ப னுன்பேரை யோலமிட் டபயமென்
றோதிடக் கமலைதன்னி
லப்பநீ யுற்றவனை யுன்னருட் கைகொடுத்
தாதாவி னோடுதாங்கி
யருள்செய்த வுனதருட் செயலதைப் பேதையா
னறிவதற் கெளிதாகுமோ
வெப்பொழுது முனதடித் தொண்டினைச் செய்வதே
யின்பமா யெண்ணி நானு
மென்றுனது கருணையென் மீதுவரு மோவென்ன
வெதிர்நோக்கு மெந்தனுக்கே
செப்புமுன் றிருவருட் செல்வத்தி னாலெனது
தீயவிடி போக்கியருள்வாய்
சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 4

நற்பெருந் துறைவளர்கு ருந்தினடி நிழலிலே
நண்ணியே தென்முகமதாய்
நாடரிய சிவஞாந போதபுத் தகமேந்தி
ஞாநமுத் திரையினாலே
சொற்பெருஞ் சொல்லினைச் சொல்லாம லேசொலித்
தூயவுட் பொருள்விரிக்கத்

தொடர்பாச மற்றுமணி வாசகரொ ருத்தரே
சுகஞான நிலையடைந்தார்
பிற்போது மானிடச் சட்டைபூண் டேவந்து
பேரற்பு தங்கள்செய்து
பேரின்ப முற்றுபுவி யோருய்ய வேயருட்
பேறளித் ததுமலாமற்
சிற்பதச் சகளநிஷ் களமாயெ ழுந்தவுன்
திறமறிகு வேனோபேதை
சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 5

கற்பகச் சோலைநிழன் மேவிடினு மென்னநின்
கழலடியி னிழலாகுமோ
கநகமா ளிகைவசித் தென்னநின் னாலயங்
காப்பதற் கீடாகுமோ
அம்பமட மாதர்சிற் றின்பமென் னீயருள்செ
யழிவில்பே ரின்பமாமோ
அரியசந் தனமாதி நாற்றமென் னீயணிந்
தருளும்வீ பூதியாமோ
பொற்பணப் பொருளிருந் தென்னநின் றிருவருட்
பொருளுக்கு நிகராகுமோ
பொய்க்குடும் பத்துக் குழைத்தென்ன நின்றொண்டு
புரிவதற் கொப்பாகுமோ
சிற்பகலி ருந்துவாழ் வதிலென்ன வுனதருட்
டெய்வீக வாழ்வாகுமோ
சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 6

கண்டதே காக்ஷியாய்க் கொண்டதே கோலமாய்க்
கனதேகமே சிவனாய்க்
கருதிடும் போகமே முத்தியாய்ச் சிலரினுங்
காலமே தெய்வமாயுங்
கொண்டிடுங் கருமமே பிரமமாய்ச் சத்தமே
கோதிலா வத்துவாயும்

கொள்பயரு மன்றிநாத் திகரிவர்கள் கூட்டுறவு
கொள்ளாது வேதாகமம்
விண்டமெய் கண்டநூற் கொண்டுண்மை கண்டுனது
விரைமலர்த் தாளடையவே
விமலபரி பக்குவம் பெறவுன்னை வேண்டினேன்
வேறெதுவும் வேண்டிலேனே
திண்டுமுண் டாணவம கற்றியெற் கிவ்வணஞ்
செய்விப்ப துன்பாரங்காண்
சித்கா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 7

மண்ணாதி பூதமய மாயாவி காரமிம்
மானிலமே னமைத்து
வன்னமணி பொன்வெள்ளி வெண்கலமெ லாமழியும்
வத்துவென வேபகுத்து
பெண்ணாசை யேநரகி னுக்குரிய தீமைப்
பிராந்தியென வேவிடுத்துப்
பெற்றவித் தேகமோ பீற்றற்று ருத்தியென
பிரியமற் றேவெறுத்து
எண்ணரிய சிவபோ தங்கெடச் சிவபோத
மெய்தியுன தருளடைந்து
விம்மைமறு மைக்குரிய சிவயோக நிலையுற்
றிருந்துசீ வன்முத்தராந்
திண்ணமுறு பதவியே நண்ணியான் வாழ்ந்திடச்
செய்வதுன் கடமையன்றோ
சித்கா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 8

வல்லவிரு வினையொப்பி னோடுமல பரிபாக
மன்னுசத் திநிபாதமே
வாய்க்கவருள் செய்துமீ னோக்கன்ன நோக்கிகூர்
மத்தினைப் போனினைத்து
நல்லகுக் குடமெனப் பரிசித்து முப்பாச
நாசனஞ் செய்வித்தபின்

கண்ணுமொரு சத்தியோ நிருவாண தீக்கையா
ஞானுமுன் வசமதாகப்
புல்லிசிவ மயமதாய்ப் பூரண நந்தசிவ
போகத்தி லாழ்ந்துமுற்றும்
புநிதனு குவதெந்த நாளதைய றிந்திலேன்
புகலாக வுனையடுத்தேன்
செல்லவழி யில்லையுனை யல்லதெவ ரெற்கிதைச்
செய்விப்ப தேழைகண்டாய்
சித்கநா நந்தமய தக்ஷிண மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 9

ஒருகொடிப் பொழுதுமுன தடிமலரை நினைவதற்
கொழிவற்று நாளுமெந்த
னொருசாண்வ யிற்றினுக் கிரைதேடி னேனெந்த
னுயிரினுக் குறுதிகாணேன்
வருகால னுக்குயிர்வ ளர்த்தளித் தேனன்றி
வருவதறி யாதுகெட்டேன்
மாயமா னிடதேக மிதுவுமெரி படுமென்ற
வகையையொரு சிறிதுமறியேன்
பெருகுமூ வாசையிற் போராசை யானவொரு
பெண்ணாசை கொண்டுழன்றே
பித்தனு மெந்தன்வா ணுளைவீ ணாக்கிமறு
பிறவிக்கும் விதைவிதைத்தேன்
திருவருட் படிவவென் பிழைபொறுத் தருளிநீ
தீவினைய கற்றல்வேண்டும்
சித்கநா நந்தமய தக்ஷிண மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 10

பகருமறை யாகமந் தனிலுரைசெ யாவீன
பரசமய நாசசரபம்
பன்னுமுயி ரேபிரம மென்னுமே காத்மமத
பஞ்சனப் பஞ்சானனம்
புகலரும் பில்லிசூ னியவைப்பு டன்சங்கை
போக்கியருண் மந்த்ரபீடம்

பொன்றுகுன் மங்குஷ்ட நோயாதி நீக்கியே
புனிதமாக் கிடுமௌஷதம்
மிகவல்ல மாயாந்த காரமன தூர்த்தராது
விஷயஹர ஞானதீபம்
வேதாந்த சித்தாந்த சாரோப தேசவர
விற்பனக லாதரங்கம்
திகழுமன் புடையவர்த மகவிருள கற்றிடுஞ்
சீதகுண சந்த்ரோதயம்
சித்கனா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 10

கருணையங் கடலைக டற்குளெழு மமுதமே
கற்பகச் சோலைநிழலே
கருதுநவ நிதியமே நற்காம தேனுவே
கரையிலா வருள் வெள்ளமே
மருளகல ஞானமா மழைபொழியு மேகமே
மாசின்றி வொளிர்மதியமே
மணியே மணிக்குளெழு மொளியே யினித்தசுவை
மருவிக்க னிந்தகனியே
அருமினிய செங்கரும் பேசதா வானந்த
மானசுக வைபோகமே
அமரருக் குணர்வரிய வழிவில்பத மேயுன்னை
யடியனேன் புகழவசமோ
தெருளளித் தெனதுமன விருளொழித் தருளியென்
சிந்தாகு லந்தவிர்ப்பாய்
சித்கனா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 11

ஐயநின் மலரடியி னீழலே மாளிகையு
னருளெனக் கழிவில்செல்வம்
அக்கமணி யேபணிக ளங்கிதிரு நீறுவுன
தன்பெனக் குரியசெங்கோல்
மெய்யடிய ரேசேனை சரிதாதி மார்க்கமே
விநயமிகு ராஜ்யதந்த்ரம்

வேண்டியுனை வலம்வருத லேபவனி வுன்பெயர்
விளம்புவது வெற்றிமுரசம்
துய்யவுன் சேடமே வெனதுணவு நின்னுருத்
தோற்றமே சந்த்ரோதயம்
துகளிலுன் சன்னிதிவ சிப்பதுத் யானமுன்
சுகமெனக் காடுமோடை
செய்யும்யோ காசனச் சிம்மா சனத்தேறு
சிவராஜ ரீகமருள்வாய். 12

சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞாந குருநாதனே.
நீதிநெறி யற்றுசம யாசார நியதியொடு
நிகமாக மங்கள்கெட்டு
நிகழுமிக் கலியுகந் தனிலொருவ ருக்கொருவர்
நேசமில் லாதுவஞ்சப்
போதனையு டன்பொய்ப்பொ றாமையொடு சூதுபகை
போலியுப சாரமொழியும்
புகழ்பேசி யும்பின்ன ரிகழ்பேச லோடுதற்
புகழ்விரித் தரியமித்ர
பேதகஞ் செய்துதர் மாதிசற் காரியம்
பெருகிடா ததையழித்தும்
பெற்றவிப் பிறவிக்கு வுற்றவழி தேடாத
பேருலக மிதுவாஜை தாற்
றீதுபுரி யாதுவுன் பாதமற வாதவென்
சிந்தனைக் கருள்புரிகுவாய்
சித்கநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 13

உந்தனைக் கதியென்று வந்தவெந் தனையிடர்க்
குட்படுத் துதனீதியோ
வுனைநம்பி னேனென்ற வெனதுமொழி யுறுதியா
யுன்செவிக் கேறவிலையோ
தந்தைநீ மைந்தன்யா னன்றோப ராமுகந்
தானேவு னக்குமுறையோ

தற்சமய மெந்தனைக் கைவிடிற் பழியுனைச்
சாருமென் பதிலையமோ
அந்தநாண் முதலிந்த நாள்வரையி லெனதுவர
லாறெலாஞ் சொல்லவிலையோ
வப்படியி ருந்துநீ யிப்பொழுது வந்தென்னை
யாதரிக் காததேனோ
சிந்தைதனி லுந்தனர விந்தபத மன்றியொரு
சுந்தனையு மில்லையையனே
சுத்தநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 14

யகாரமுத லெட்டிலெட் டாமெழுத் தேமூலம்
ஔகாரம் அகரம் உகாம்
அரியமக ரம்பிந்து வர்த்தசந் திரனும்பி
ணுகியநி ரோதிநிய தாய்ப்
பகர்நாத நாதாந்த சத்தியொடு வியாபிநி
பன்னிடுவி யோமரூபை
பங்கமில நந்தையொ டநாதையு மநாசிருதை
பகர்சமனை யுன்மனை சிவம்
புகழுமிச் சோபான மானமார்க் கத்திலனு
போகசிவ யோகஞான
புங்கவநி ராலம்ப துங்கபத மேவுபரி
பூரணா நந்த முற்றுத்
திகழனன் னியமாகி மகிழ்வுறுந் தெய்வீக
சீல மேவிய ரூபனே
சித்தநா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞான குருநாதனே. 15

இம்மைதனி னீண்டவாழ் நாளிணெடு நோயின்மை
யெந்நாளு மிளமை யழகோ
டிடிலாக் கல்வியறி வோடுபொன் னும்புகழு
மினியநன் மக்களோடும்
விம்முநெல் வலிதுணிவு வெற்றிநல் லூழிணெடு
வேண்டருநு கர்ச்சிபெருமை

விள்ளுமிப் பதினாறு பேறையும் பெற்றிந்த
மேதினியி லுற்றநாளுஞ்
சொம்மைமூலை மங்கையொரு பாகனடி மறவாத
கொள்கையுட னடியருறவுங்
கொண்டீதன் முதலான குணமுடைய னாகியுன்
குரைகழற் பெருமையாலே
செம்மைஞா னம்பெற்று மறுமையிற் பேரின்ப
செல்வத்தில் வாழ வருள்வாய்
சித்கனா நந்தமய தக்ஷிணா மூர்த்தியே
சிவஞாந குருநாதனே. 16

ஷோடச கலாமாலை
முற்றிற்று.

உ

ஸ்ரீகருணாநிதி

உயிர்வருக்கக் கலிவிருத்த மாலை.

நூல்.

1. அமலற் கடியா யருள்வா ரிதியே
முமலத் துறையா முனிமா தவனே
நிமலச் சிவனார் நிகரா கியவா
கமலைப் பதிவாழ் கருணா நிதியே.

2. ஆயா வுனையே வகலே னடியேன்
மாயா வரமே வலவா தருவாய்
சேயான் பிழையே செயினும் பரிவாய்
காயா தருள்வாய் கருணா நிதியே.

3. இரவும் பகலு மினியா வுனையே
பரவுஞ் சிறியேன் பகரோ லமதின்
அரவஞ் செவிகேட் கலையோ வறியேன்
கரவுந் தகுமோ கருணா நிதியே.

4. ஈவா யருளா லெதையும் பரிவாய்
பூவா கியநின் புனிதச் சரணம்
துவா மலராற் றொழுவே னெனையே
காவாய் ததியே கருணா நிதியே.

5. உண்ணே ருயிருக் குயிரே வினியான்
விண்ணே பெறினும் விலகே னுனையே
தண்ணே ருனதா டருவாய் பெறவே
கண்ணே மணியே கருணா நிதியே

6. ஊக்கத் தொடுமீ னெனநோக் குறவுந்
தூக்குக் குடமாய்த் தொடவுங் கமடத்
தேய்க்கப் புரிசிந் தனைசெய் தெனையே
காக்குங் குருவே கருணா நிதியே.

7. எனையே வனியா யமதா யிடர்வே
தனையே படவே விடவே தகுமோ
வினையே புசியேன் மிகுமா சுவையார்
கனியே நறவே கருணா நிதியே.

8. ஏத்திக் கபவர் தமையின் றமிழால்
வாழ்த்தித் துதியா வரமீய்ந் தனதாட்
கீர்த்திப் புனைசொற் கிளர்வேவருளிக்
காத்துத் துணைசெய் கருணா நிதியே-

9. ஐயா குருவே வருணா சலமே
செய்யா வதியற் புதநற் செயலாய்
மெய்யா வடியார் மிடிதீர்த் தருள்செய்
கையா தருநேர் கருணா நிதியே.

10. ஒத்தார் மிக்கா ரிலணா யுளவா
முத்தா வமுதே முதல்வா சரணஞ்
சத்தாக் கிடுவாய் ததியே வெனையாள்
கர்த்தா வலவோ கருணா நிதியே.

11 ஓட்டைச் சடலத் துறுமா விபடும்
பாட்டைச் சொலவோ பரிதா பமலோ
வாட்டும் வினைதீர்த் தருள்வாய் பரமே
காட்டித் தருவாய் கருணா நிதியே.

12 ஔவிய முதலா னவைபோ யறவும்
வெவ்வினை புரியாமதிமே விடவுஞ்
செவ்விய னுகர்வே தருவாய் திருவே
கௌவைத் தவிராய் கருணா நிதியே

உ

சற்குரு வழிபாடு கிளத்தல்

தலைவி கூற்று.

ஆனந்தக்களிப்பு.

ஆனந்தம் ஆனந்தம் தோழி சிவ
ஞானம்பெற் றேயெந்த நாளுநீ வாழி (ஆ)

1. குருதக்ஷி ணாமூர்த்தி பத்தி தனைக்
கொண்டவ ருக்கெதுங் கைகண்ட சித்தி
வருஞான மார்க்கத்தை நத்தி செல்லு
மனமுடை யார்க்குள்ளங் கைக்கனி முத்தி

2. காக்ஷிப் பொருளெல்லாம் அழியும் அதைக்
கண்டறிய நமக் குண்டன்றோ விழியும்
சாக்ஷியாய்ப் பலநூலு மொழியும் ஞான
சற்குருவால் மனச்சஞ்சலங் கழியும்.

3. உலகமோ பலவிதப் போக்கு அது
உறுதியோ விலையோவென் றறிவினால் நோக்கு
விலகியுன் பாசத்தை நீக்கு இது
விமலசற்குருநாத னருள்செயும் வாக்கு

4. நாற்றத் துருத்திச்ச ரீரம் ஒரு
நாள்முழு கேல்நாறு மேகாத தூரம்
எற்றலா மழுக்கொரு பாரம் இதற்
கெத்தனையோ விதமாய்ப்பரி காரம்

5. ஊனாலமைந்தபொய்க் கோட்டை இதற்
கொன்பது பக்கத்திலேநாறும் ஒட்டை
ஆனாலு மதுசெயுஞ் சேட்டை தனை
யாருடன் சொல்வதந் தோமானக் கேட்டை

6. நரைதிரை யோடந்த மூப்பு வந்து
நண்ணும்போ தபிமானத் தாலங்க லாய்ப்பு
வரவாக் குறையும்வி ருப்பு இந்த
மானிடச் சட்டைக்கு மேனேகி தாப்பு

7. உயிரென்னுங் கிளிவளர் கூடு அது
ஓடிப்பறந்தால் வரும்பெரும் பாடு
எயில்சூழக் கட்டின வீடு தனில்
இருப்பது சதமல்ல வழைக்குமே காடு

8. எமனுயிர் கொள்ளும் போது அவற்
கென்னசொன் னாலுஞ்செ வியில்வி ழாது
தீமை நன்மைக ளல் லாது நம்பின்
செல்வ முதலியவைகள்வ ராது

9. ஜன்மங்களுலகில னேகம் அவை
சாதலும் பிறத்தலுமே அனு போகம்
கன்மத்தினு லிந்தத் தேகம் பெறக்
கண்டும் வீணுக்குவதோ நல்வி . வேகம்

10. கூத்தாடு மிடத்தினிற் கூட்டம் அந்தக்
கூத்தொழியக் கூட்டமெடுக்குமே யோட்டம்
பார்த்துக்கொள் வாழ்வதின் நோட்டம் அனு
பவித்தவித் தனைநாளிற் கண்டதென் ச்ரேஷ்டம்

11. தொல்லையே குடும்பத்தின் பாரம் பெருஞ்
சுமையைச் சுமப்பதிற் கஷ்ட நிஷ் டூரம்
அல்லலே தினமும் வி சாரம் நீ
அடைந்துங் கண்டாயோ அணுவதும் ஸாரம்

12. நான் புகல் வார்த்தையில நில்லு குரு
நாதன் கருணை நிதியிடஞ் செல்லு
ஆன பேரன்பினைப் புல்லு அவர்
அடிபணிந் தேசெய்த பிழைகளைச் சொல்லு

13. நெற்றியி லங்கத்திற் பூதி தனை
நிறையத் தரிப்பதுவே மறை நீதி

மற்றுங் குரு நாமம் ஓதி அங்க
மணிதனை யணிவது வுனக்குநற்கி யாதி

14. அருள் பெற வேண்டி மன் ருடு அவர்
அருமை பெருமையைத் தினமுங் கொண் டாடு
பெருகுமன் பாற் றுதி பாடு நான்
பேதையென் றவன்மீது பாதத்தைப் போடு

15. குருவைச் சிவ மென்றே எண்ணு நீ
கொளு முடல் பொருளாவி யவர் கொளப் பண்ணு
அருகுற்றுச் சரிதாதி நண்ணு அவர்
அருளிச் செய்வாருனக்கே ஞானக் கண்ணு

16. தன்னை யறிந்திடக் காணும் பின்பு
தலைவன் தரிசனம் தானகத் தோணும்
மன்னும் பேரானந்தம் பூணும் இந்த
வாழ்க்கையைப் பெறமுன் செய்புண்ணியம் வேணும்

17. இதுவுடல் அடைந்ததின் லாபம் மேலும்
இதைவிட வுண்டோ மேலானசல் லாபம்
மதியுளா ரிதனை யா க்ஷேபம் சொல்ல
மாட்டார் சொன்னலவர் முன்செய்த பாபம்

18. குருவருளில்லாமல் ஞானம் பெறக்
கூடுமென் றுரைப்பதுவோ மதி யீனம்
அருள் பெறவிதுவே சோ பானம் ஈசன்
அளிக்குமே பேரின்ப மாகிய ஸ்தானம்

19. ஆணவாதிகளை நீக்கி யுனை
யடிமை கொண்டே யருட் கண்ணாலே நோக்கி
வீணான வினை யெலாம் போக்கி ஞான
விமலனாய்ச் செய்வான் தன்னைப் போலும் ஆக்கி

20. த்யாகராஜன் தமிழ் பாடி அனு
தினமுங் குருநாதன் தரிசனந் தேடி
எகிஞ லெதுவுங் கை கூடி யென்றும்
இன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம் நீடி.

தலைவி கூற்று

சற்குரு வல்லபமுரைத்தல்.

கண்ணிகள்.

1. சீரார்வன்மீகபுர வாசனடி
தேடரிய ஞானோப தேசனடி
பாரா ரெவர்களுக்கு நேசனடி
பாவித் தருள்புரிவி லாசனடி

2. தக்ஷிண மூர்த்திகுரு நாதனடி
சச்சிதா நந்தமய போதனடி
அக்ஷய மளிக்கவந்த நீதனடி
ஆனந்த வாழ்வருளும் பாதனடி

3. முப்பாசம் போக்கியருள் சீலனடி
முத்தாப நீக்குந்திருக் கோலனடி
துப்பாருந் தூயரானு கூலனடி
தொண்டர் குழாங்களுக்கே லோலனடி

4. சிந்திக்கும் ஞானமய உருவானடி
சிந்திப்பார் சிந்தையிலே வருவானடி
வந்திக்கும் அன்பர்க்கருள் தருவானடி
வஞ்சக முடையவரை மருவானடி

5. சஞ்சிதந் தனையகலக் கெடுப்பானடி
சார்ந்திடும் பவமதனைத் தடுப்பானடி
நெஞ்சத்தி லுறுங்கவலை யெடுப்பானடி
நித்தியானந்தமதைக் கொடுப்பானடி

6. பில்லிசூனிய மெதுவுந் தீர்ப்பானடி
பேயாட்டந் தனையடக்கிக் காப்பானடி
கொல்லும்விஷத் தீமைகளை நீப்பானடி
குறைபாத வாழ்வில் வைத்து பார்ப்பானடி

7. நம்பினோர்க் குற்றதுணை யாவானடி
நண்ணிய பயன்கொடுக்கப் போவானடி
அம்புவி வாழ்க்கைதனில் மேவானடி
ஆண்டருளி வேண்டியதை யீவானடி

8. வேதாந்த சித்தாந்த ஸாரனடி
வித்தகந் தந்தருள்உ தாரனடி
நாதாந்த தத்துவவி சாரனடி
நான்மறை முடிவுணர்ந்த தீரனடி

9. மானிடம் போலும்வந்து பிறந்தவண்டி
மாயாவி காரமெலாந் துறந்தவண்டி
ஞானு போகமதிற் சிறந்தவண்டி
நாலாறு பனிரெண்டும் இறந்தவண்டி

10. காமாதி குணமொழித்த சித்தனடி
கண்டு கழித்தே வெறுத்த நித்தனடி
நேமம் பிசகிடாத பத்தனடி
நித்தியா நித்தியந்தேர் முத்தனடி

11. எட்டா நிராலம்ப யோகனடி
எல்லா மறிந்துணர்வி வேகனடி
அட்டமா சித்தயனு போகனடி
அன்பருக் காகவருந் தேகனடி

12. அஞ்செழுத்தை யோதுந்திரு வாயனடி
அந்தரர்க்கு மேலதிகத் தூயனடி
தஞ்சமடைந் தோர்களின்ஸ ஹாயனடி
தன்னைப்போ லாக்கிடும்உ பாயனடி

13. மூவுலகி னிருளகற்றுந் தீபனடி
முக்காலந் தனையுணர்ந்த பூபனடி
தேவருக்கு மேலதிப்ர தாபனடி
சிவசாதனங்களணி சோபனடி

14. மதிமண்ட லத்தமுத பானியடி
மாசிலுன் மனைகடந்த தானியடி

பதியாஞ் சிவத்துக்கபி மானியடி
பரத்துவம்பார்த் தறிந்த ஞானியடி

15. சொல்லரிய தத்துவப்ர சங்கனடி
சோதியுரு வானநிஷ்க ளங்கனடி
நல்லவர்க ளாமேழை பங்கனடி
நாதபிந்து வாயிணங்கு லிங்கனடி

16. த்யாகராஜன் பணியு மூர்த்திபடி
செப்பத்தரமோ அவன் கீர்த்தியடி
ஏகமன மோடவனை ஆர்த்தியடி
இயற்றுபவ ருக்கெதுவும் பூர்த்தியடி

முற்றிற்று.

உ

வன்மீகபுரம்

ஸ்ரீ குரு
தக்ஷிணா மூர்த்தி கீர்த்தனங்கள்.

1. நாட்டைக்குறிஞ்சி—மிசிரம்.

பல்லவி.

பிழைகள் பொறுத்தருள் புரிவதுன்—பாரம்-பேதையான்செய்த ()

அனுபல்லவி.

எழில்வன் மீகபுர மெழுந்த குருவே
ஏழையடியவர்க் கிசையுந் திருவே
அழிவிலருண்மய மான வுருவே
அமரர்க்கரியகற் பகப்பூந் தருவே. (பி)

சரணங்கள்.

1. ஆதியானபரஞ் சோதிச் சிவத்தினை
யோதிடாமல் வெறுத்தேன்—சதுர்மறை
யாகமங்கள் முறை யாகச் சொல்லியும்வி
வேகமின்றி மறுத்தேன்—இதுவன்றி
நீதிநியமாதி நெறியைப் பழித்தேன்
நீண்டவயதை நிஷ்பலனாய்க் கழித்தேன்
யாதுங்காணா தகங்கரித்துச் செழித்தேன்
ஆப்பசைத்த குரங்கதைப்போல் விழித்தேன். (பி)

2. நாடிமாதர்களைத் தேடிசுகமுற
வாடிமதி விடுத்தேன்—பொருண்மிக
நண்ணும்யோசனைகள் பண்ணிபலபல
புண்ணியத்தைக் கெடுத்தேன்—அறிவின்றி
கூடும்பொய்யரைக் குலவி யாடினேன்

குடும்பக்கவலையிற் குலைந்து வாடினேன்
நீடும்பவங்களை நிதமும் தேடினேன்
நினது மலரடி நிழலைத் நாடினேன். (பி)

3. கனவிலும் பவத்தை யினிசெய்யாதமதி
தனையெனக்குத் தருவாய்— அருள்சுரந்து
காத்தெனதுமுகம் பார்த்தருளிவினை
தீர்த்திடவே வருவாய்—துதிபுரிந்து
கனியு மன்ப ரிடர் கடத்தும் லோலனே
கருணா நிதியேநிஷ் களவி சாலனே
தினமுந் த்யாகராஜன் பணியுஞ் சீலனே
சிற்ப ராநந்த திவ்ய கோலனே. (பி)

2. தன்யாசி - ஆதி.

பல்லவி.

கருணாநிதியாகிய மெய்யனே உனைச்
சரணாகதி யடைந்தேன் ஐயனே

அனுபல்லவி.

கருணா நிதிமெய்யனே - சரணாகதி ஐயனே
காரும் - அருள் - தாரும் - முகம்
பாரும் - எனக் - காரும் - இல்லை. (கரு)

சரணங்கள்.

1. தீயனெத் தனைகுற்றஞ் செய்திருந் தாலு நீயே
தினையள வுமெண்ணாது சித்தத்திற் பொறுப் பாயே
தாயன்றோ நீயெனக்கு தவிக்கிறே னுந்தன் சேயே
சமயமெ னைரக்ஷித்து அபயம் நீதரு வாயே. (கரு)

2. உடல்பொரு ளாவிமூன்று முனக்கே வினிஸ்வா தீனம்
உதவியருள்வா யெனக் குனதபயப்ர தானம்
திடமா யுன்னருளாலே செல்லுகின்ற சோ பானம்
தெரியும் படியே செய்து தருவாய் நீயே மெய். ஞானம் (கரு)

3. மோகவா ரிதிவீழ்ந்து மூழ்கினது போ தாதா
மூடனெ னைத்தடுத்து முற்றுமாளலா காதா

த்யாகரா ஜன்பணியுஞ் செங்கமலப்பொற் பாதா
திருவுள மிரங்காமற் சிறியேனிடத்தில். வாதா (கரு)

3. சங்கராபரணம்—தேசாதி.

பல்லவி.

ஞானா நந்த போகனே
மோனா நந்த யோகனே (ஞா)

சரணங்கள்.

1. முத்தொழிற்குமொரு கர்த்தனைப் பாசி
வத்தையொத்த—குருவே மித்தையில் வி
ரக்தியுற்றவா முக்தமுத்தனை வி
டுத்தெடுத்த—உருவே முத்தி தரு
சுத்த நிர்க்குணசி வத்தையுற்ற நவ
தத்து வத்தையுணர் சித்தவித்தக ப
சுத்வ ரஹித பரப நித்வ குணமய
நித்யா நித்ய விவேக வரத (ஞா)

2. சதா வுனது மலர்ப் பதார விந்தநினை
வதான வரங்—தருவாய் நீயே வெனக்குப்
பிதாவலவோநான்சொல் வதானது மிகையென்
பதாயெண்ணமல்—வருவாய் யோகா நந்தசச்
சிதாநந்தஸ்வரூப ப்ரதாபனுன ஞான
ப்ரதான காகன வுதார சிவமய
ததாகார லக்ஷண சுதாகர நிர்க்குண
பதார்த்தமான தத்வ யதார்த்த சிவ (ஞா)

3. மோகபாசவலை யாகியே சுழல்வ
தாகி மோசம்—போனேன் ஏழையேனவி
வேகமாசுமரு ளேகி யாசையொழி
வாகு மாசை—யானேன் நாளுமே சுக
போக ராஜபுநி தாநிர்மல சிவ
யோக ராஜ நிபு ணாஞ்சிதகவி
த்யாக ராஜ ஹ்ருதய வாஸஸுகுணவி
வேக ராஜ குருராஜ னுகிய (ஞா)

4, பியாகடை—திசிரம்.

பல்லவி.

கருணா நிதிதரி சனமே
கைகண்ட கைவல்யமே. (கரு)

அனுபல்லவி.

அருளேவுரு வாகியெ ழுந்த
ஐயனேவன்பருக் காகவே வந்த (கரு)

சரணங்கள்

1. மனத்தினை யொருவழியில் இருத்தும்
மாசையகற்றி மருளைத் திருத்தும்
நினைக்குஞ்சிவத்தை நிலைக்கப் பொருத்தும்
நிர்மல ஞானத்தை நித்தமும் அருத்தும் (கரு)

2. பரிதிமுன் பனியெனப் பாவத்தைப் போக்கும்
பண்டை வினைகளைப் பாவனம் ஆக்கும்
வருதுயர் யாவையும் வாராமல் நீக்கும்
மனதிலெப் போதும்பே ரின்பமே தேக்கும் (கரு)

3. எண்ணிய வெண்ண மெவையுங்கை கூடும்
எதுவுநி னைக்குமு னெய்திகூத் தாடும்
மண்ணிற் பெருமை வளர்ந்தெங்கு நீடும்
மன்னும் பிணிதனை வாட்டியே சாடும் (கரு)

4 பிறவி முளையினைப் பேர்த்ததைக் கெடுக்கும்
பெற்ற பிறவிக்கும் பேரின்பங் கொடுக்கும்
துறவடையு மனத் தூய்மைவந் தடுக்கும்
துதிக்கத் துதிக்கநற் சுகப்பெருச் கெடுக்கும் (கரு)

5. த்பாகரா ஜன்துதிச் செந்தமிழ்ப் பாடி
சிந்தை கனிந்து தினமுங்கொண் டாடி
ஏகமன துடனே யன்பு கூடி
எத்திேனா ரின்பத்தில் வாழ்வாரே நீடி

தோடி. ஆதி.

பல்லவி.

எதும்பிழைபுரி யாதவொருசிறு.
பேதையானையனே—நானுனக்கு (எ)

அனுபல்லவி.

மாதவ வானவர் வணங்கும் ப்ரக் யாதா
மன்னும் வன்மீகபுரம் வாழ்குரு நாதா
ஆதரவா யெனக் கருள வொண் ணாதா
அடிமை யாக வெனை யாளலா காதா (எ)

சரணம்.

பராதீனமானவென் நிராதாரமாகிய
தாராதரமறிந்தும் பாராமுகமேன்பகல்
இராவிலாமலுனை பராவுமெனக்கருள்
தாராமலுமென்முனம் வாராமலிருப்பதேன்
சராசரங்களெலாம் பாராபரமாயெண்ணும்
வரானுக்ரஹரூப கராதாஸன்தியா
கராஜன்பணிந்திடு நிராமயஸத்குரு
பராஸகளநிஷ்களா காரனே (எ)

6. வஸந்தா—தேசாதி.

பல்லவி.

ஆதாரம் வேறேதையா—(எனக்)நி
ராதார யோகனேவுன் பாதார விந்தமன்றி. (ஆ)

சரணங்கள்.

1. மனமெனு மதயானை யென் வசம்
வரும்படி யருள்ஞான அங் குசம்
அனுதினம் சுகதுக்க சம ரசம்
அடைந்திட வுனையடைந் தது நிசம். (ஆ)

2. தேகமென் றைக்குஞ் சந் தேகம்
தினமுங் கவலையோ அ னேகம்
ஆகையா லிதே வீண் மோகம்
அகன்றிட வருள்புரி வி வேகம். (ஆ)

3. கண்டதை யனுதின முங் கண்டேன்
கருதியு ண்டதைக் கருதி யுண்டேன்

பண்டை விதியின் பயனாய் விண்டேன்
பார்த்த றிந்துய தார்த்தங் கொண்டேன். (ஆ)

4. ஆசை யென்னுங் கடல்வி ழுந்தேன்
அலைது ரும்பென வேஅு லைந்தேன்
மோச மாயெ னறிவி ழுந்தேன்
முதல்வ னான வுனைய டைந்தேன். (ஆ)

5. த்யாக ராஜன் தினமுந் துதியே
சிறக்கப் பாடுங் கருணை நிதியே
யோக ராஜ னான பதியே
உனையல் லாம லேது கதியே. (ஆ)

7. மத்யமாவதி. ஆதி.

பல்லவி.

ஸமரஸ ஞானந் தருவாய்— ஸத்குருவே உன்
தரிசனந்தா வருவாய் (ஸம)

அனுபல்லவி.

அமரர் புகழுமுந்தன் அருட்டிரு நோக்கினாலே
அடுத்த வெந்தனைச்சற்றே தடுத்து வந்தேயன் பாலே. (ஸம)

சரணங்கள்.

1. கடவுளொன் டென்றறிந்து கருத்தினிற் பதிக்கவும்
காசினிக் கவனருட் காப்பென மதிக்கவும்
உடலழிந் திடுமெனு முணர்வது வுதிக்கவும்
உளந்தனி லனுதின முனதடி துதிக்கவும் (ஸம)

2. வேதாகமபுராண விதியனு சரிக்கவும்
மெய்யற மார்க்கத்தை விரும்பியா தரிக்கவும்
பாதகம் பெரும்பழி தனைப்பரி கரிக்கவும்
பத்தர்களைக்கண்டதும் பணிந்துப சரிக்கவும் (ஸம)

3. இரந்தவர்க் கிலையென திபன்றதைக் கொடுக்கவும்
என்று மறிவுடையா ரினத்தினை யடுக்கவம்
வரும்பவ மென்றுலந்த வழிதனை விடுக்கம்
மனதை யலையாதொரு வகையுற வொடுக்கவும் (ஸம)

4. உள்ளவுண் மையைக்காணி லொப்பமிட் டிருக்கவும்
உண்மையில் லாதவற்றை யொழித்தரு வருக்கவும்
கள்ளமில் லாமலுள்ளக் கருணையைப் பெருக்கவும்
காமாதி குணங்களின் களைதனைக் கருக்கவும் (ஸம)

5. அயலவர் வாழ்விற்பொ றாமைகொள் ளாமலும்
அண்டின வரையனு தரவாய்த்தள் ளாமலும்
பயனிலா ரைத்துரும்பாய்ப் பழித்துதள் ளாமலும்
பண்டையோர் மொழிகளைப் பரிகாசம்வில் ளாமலும் (ஸம)

6. முன்னொன்று பின்னொன்று மொழிகள் ஆடாமலும்
முறையின்றி பொருள்சேர்க்கு முயற்சி நாடாமலும்
இன்னல்செய் தேவெவர்க்கு மிடரைத் தேடாமலும்
இழிவுறுங் கயவர்க ளினத்தைக் கூடாமலும் (ஸம)

7. வந்தவர் பசிகண்டு வயிற்றுண வளிக்கவும்
வாய்த்தது கூழாயினு மகிழ்ந்துண்டு களிக்கவும்
நொந்திடு வோர்களிடர் நோக்கிக்கண் டுளிக்கவும்
நுண்மைமறா லுட்பொருளை நுகர்ந்தின்பங் குளிக்கவும் (ஸம)

8. படித்த படிப்பாலுந்தன் மலர்ப்பதம் போற்றவும்
பணிமலர் கொண்டுனடி மலரதிற் றூற்றவும்
தடித்த வாணவத்தினைத் தவிர்த்ததை மாற்றவும்
தன்னிற் சிறியாரேனுந் தாழ்ந்துரை சாற்றவும் (ஸம)

9. எண்ணில் பலமதங்க ளிருக்கட்டுமொரு பக்ஷம்
எம்மதமோ வுன்மத மெனக்கதுவேசு பிக்ஷம்
திண்ணமுந் தனருளிற் சிறிதேவனந்த லக்ஷம்
சிவமேநீ யென்பதற்குன் செயல்களன்றோப்ரத் யக்ஷம் (ஸம)

10. ரஞ்சிதகவி த்யாக ராஜனுக்கனு கூலா
ராகத்வே ஷாதிகுண ரஹிதஸ—ஜந பாலா
சஞ்சித நாசஞான ஸகளநிஷ்கள சீலா
சற்குரு வாயெழுந்த தக்ஷிணாமூர்த்தி கோலா. (ஸம)

குழிப்பு.

தான தந்தனா தனந்தனந்தன
தான தந்தனா தனந்தனந்தன
தான தந்தனா தனந்தனந்தன தனதானா

சந்தம்.

மாசகந்தனிலே கொடுங் கொடும் பவ
சாகரந்தனிலே படும் படுந் துயர்
வாழ்வைசிக்தையிலே பெரும் பெரும் பத மெனவாடி
மாயவஞ்சனையே தினந் தினந் தொழி
லாகவந்ததுமே பணம் பணங் கொடு
வாருமென்றுரையே சொலுஞ் சொலுங் கிளி மொழிமானார்
பேசுமிங்கிதமே குணங் குணந் தரு
போகவின்பமதே சுகஞ் சுகம் பெறு
பேறினும்பெரிதே தகுந் தகுந் தது வெனநாடி
பேதையின்பதமே தொழுந் தொழும் பனை
நீதிருந்திடவே கனங் கனம் பெற
பேபதின்குணமே கெடுங் கெடும் படி யருள்தாராய்
ஆசைமிஞ்சிடவே தனந் தனங் கொள
வேயளைந்திடவே புகும் புகும் வழி
யாவையும்பழியே செயுஞ் செயும் படி நிகழாமல்
ஆதிசங்கரனே பரம் பரம் பொரு
ளாயுணர்ந்தறிவே செழுஞ் செழுஞ் சர
ணாலயந்தனிலே சதஞ் சதம் பெற வெனையாளாய்
பாசவெம்பிணியே பவம் பவந் தனை
மோசனம்புரியே சகஞ் சகந் தனிற்
பாதகந்தனிலே விழும் விழுந் திடு முனமேநீ
பாவிநெஞ்சினிலே வரும் வரும் படி
யேவிரும்பியதே வரம் வரங் கொடு
பாடுசெந்தமிழே கொளுங் கொளுஞ் சிவ குருநாதா.

குழிப்பு.

தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த தானதானா.

சந்தம்.

உனதுபத வாரிசத்தை யெனதுவிரு ளாகத்தி
லொருபொழுது மேதுதிக்க — வுணராது
வுலகமதி லேசுகத்தை நிலைபொருளெ னாமதித்து
வுழலுவதி னாலிளைத்து — மெலிவாகி
வனிதையர்க ளாசைமெத்த மனதினிடை யேமிகுத்து
மருவியவர் பாலடுத்து — மயலாலே
வலியபொரு ளேகொடுத்து மலரணையி லேசுகித்து
மதனகலை யேபடித்து — வொழிவேனோ
நினதருமை யேமிகுத்த மகிமைதனி லீனபுத்தி
நினைவுமற வாதிருக்கு — மனமீய
நிகழுமற மாபழிக்கு ளறிவுபுக லாதுசத்ய
நெறியடைவ தானதத்வ — மொழிகூற
இனிதுபெற வேயெனக்கு வருள்கரு ணாநிதிப்பெ
ரெழிலுருவ மேவெடுத்து — வருவாயே
இமையவரு மேபதைக்க வருவுருவ மாபதத்தி
லெழுபாம ஞானமுத்த — குருநாதா.

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி
ஸ்தோத்திரச்சிந்து.

செந்திரு வளர்மயிலை வாசன் றுதிச்
செந்தமிழ்ப் பாடிடுந்த்யாக ராஜன் பணி
சித்கனா நந்தவுருவே தக்ஷிணா மூர்த்திகுருவே
சீலா—ஞான—மூலா

தீயவழி மேவிநெடு நாளாய் முனஞ்
செய்வினைக ளேங்கெனை நீ யாளாய் எந்தன்
சிற்றறிவின் மாசகற்றி முற்றறிவ னாகும்பெற்றி
செய்வாய்—அருள்—பெய்வாய்

பந்தமெனு மோர்கடலில் வீழ்ந்தேன் முன்செய்
பாவச்சுமைப் பாரத்தினால் ஆழ்ந்தேன் உந்தன்
பாதமல ரானபுணை யாதரவல் லாதுகரை
பாரேன்—வந்து—சேரேன்

பாவபுண்ணி யங்களெனுங் கன்மம் ஒத்துப்
பாரில்வரு மேமானிட ஜன்மம் இன்னும்
பாவம்புரி யாமலுன்னை மேவும்படி பாகவென்னைப்
பாரும்—தயை—கூரும்

வந்துனது கந்துமலர்ப் பாதம் போற்றி
வந்தனஞ்செ யெந்தனுக்குன் போதம் தர
வர்மமினி செய்வதென்னே தர்மமல வேயென்முன்னே
வாவே—எனை—யாவே.

மானிலத்து வாழ்வுனக்குத் துரும்பு ஆன
மானிடனெ னக்கதுவே கரும்பு வுந்தன்
மாமலர்க்கண் ணாலெனைச்சற் றேகணிக்கில் யானிடர்க்கண்
வருந்தேன்—அதிற்—பொருந்தேன்.

சந்ததமு முந்தன்பதம் பாடி வாழுஞ்
ஜன்மமே யெனக்கனந்தங் கோடி நறுங்

தாதவிழுங் கற்பகத்தின் கீழமரும் பொற்பதத்திற்
றரியேன்—உனைப்—பிரியேன்.

தாயொடு தந்தையுமற்று நீயே இது
சத்தியமுக் காலுநம்பு வாயே வெனைத்
தள்ளினுந் தடுத்தேவெனைக் கொள்ளினு மடுத்தேனுனைத்
தானே—அடி—யேனே.

2. வேறு.

ஞானவுரு வானகுரு நாதா வர
மோனசிவ மானதவ நீதா சுக
நாடுசுரர் தேடரிய போதா பவ
நாச பாச ரஹித த்யாக
ராஜ தாஸ விஹித யோக
நாதவெளி மேவியவி நோதா விந்த
நானிலமே லாம்பரவு பாதா.

நம்பியுன்ப தம்பணிந்தே னையா நானி
யம்பியேபு லம்புவதும் பொய்யா வெனை
நண்ணிடுமி டும்பைதவிர் துய்யா யாரு
நாடு தற்கரி தான நற்பொருள்
ஞான முத்திரை யாலெ னக்கருள்
நத்தியேவ ளிக்குமலர்க் கையா தூயர்
நட்பினைவி ருப்பமுறு மெய்யா.

கானலொத்த மானிலத்து மோகம் பெறு
மானிடர்க்க தேசுகப்ர வாகம் அதைக்
காதலிப்ப தாலடுத்த தேகம் கொடுங்
காமன் வெங்கணை யான்மெ லிந்துயி
ரேமன் கொண்டிட வேவி ரைந்துமே.
காலமழி யாகிபத னேகம் அதிற்
கண்டபயன் பண்டைவினைப் போகம்

கண்டபொருள் யாவையும் வி நாசம் பெறக்
கண்டுமதிற் கொண்டபெரும் பாசம் சொலக்
கார்க்கடலைப் பார்க்கிலும் வி லாசம் அதைக்

கடக்க நினைத்து மனத்து விருத்தி
யொடுக்கு முயற்சி யெடுத்து திருத்தி
கஞ்சநிக ருன்சரண நேசம் வைத்துக்
கருதவேயு னருள்தருவாய் லேசம்

ஈனமுறு மானிடர் வி சாரம் அதற்
கேதுவொழி வேதுபரி காரம் கொளு
மின்பமிலைத் துன்பமோக ஊரம் மாத
ரிடத்திலே குயக் குடத்திலே முத்து
வடத்திலே கடி தடத்திலே யுற்ற
காதலோநல் வாழ்வுக் கோர் கு டாரம் எனக்
காத்துவினை தீர்ப்பது முன் பாரம்

எண்ணரிய புண்ணியத்திற் கொஞ்சம் சற்று
மீடுபடு மோவெனது நெஞ்சம் உனை
யேதுதிக்க வேபொழுது பஞ்சம் அன்றி
யிகபரசுக சிவகதையென
திருசெவியதி லொருநொடியள
வேற்பதெனி லோவெனக்கு நஞ்சம் ஏதோ
வின்றுவந்த டைந்தேனுனைத் தஞ்சம்

நானெனும கந்தைதனை வாட்டி தூய
நல்லறிவை யெந்தனுக்குத் தீட்டி யருள்
ஞானமு தந்தனையு மூட்டி பர
நாதபிந்து வாயிணங்கி
யேயெழுந்து மேவிளங்கி
நண்ணுமுன தண்மையுருக் காட்டி யின்ப
நல்கிடுவாய் வல்வினையை யோட்டி

நாதனேபொல் லாதபாச பந்தம் பெற்ற
நாண்முதலாய் நானிதுபர் யந்தம் இடர்
நண்ணினதை யெண்ணிடில நந்தம் உனை
நாடிமகிழ்வி னேடுமுடலு
மாவிபொருளும் யாவுமினிமேல்
நல்கினேனுன் பாலுனக்கே சொந்தம் நீயு
நல்குவாயுந் தன்பாதார விந்தம்

3. வேறு.

தத்துவ ஞானம	யாகரா	உப
சாந்த வரகுண	சாகரா	பர
சச்சிதா நந்தம	ஞேகரா	பல
சமயந்தனி னுழையுங்குண		
முடையந்தக ரறியும்படி		
சற்குரு வானதி	வாகரா	வரு
தாபவி நாசக்ரு	பாகரா	
வித்தக னேபக்ஷ	பாதமா	வெறும்
வீணனு னக்கும் வி	ரோதமா	உனை
வேண்டுதல் ஞாய வி	காதமா	கொடு
வினையாவினி புவிமீதினி		
லொருமானிட னெனவேவர		
விடுவ துனக்கு வி	நோதமா	ஞான
மெய்ம்மை தரவும்ப்ர	மாதமா	
நித்தமுந் தொலையாத	மோகமே	அற
நித்தியா நித்யவி	வேகமே	தந்து
நிர்மலா நந்தவை	போகமே	பெற
நீயேவருள் வாயேவொரு		
சேயேவென தாயேவென		
நீயுமிருந்திந்த	சோகமே	யுறில்
நிலைக்குமோவெனக்		
அத்தவென் சித்தத்தி	லாக்ஷியே	கொண்டு
வானந்த மானவுன்	காக்ஷியே	தர
லாகாதோ வீதென்ன	குக்ஷியே	புகழ்
அருணாசல கருணாநிதி		
குருநாயக சரணாநிதி		
யானடைந் தேன்சர்வ	சாக்ஷியே	தடுத்
தாண்டருள் வாய்ஞான	மாக்ஷியே.	

4. வேறு.

மஞ்சுலாம்பொழில் வன்மீகமாபுர

வாசனே சற்குரு	நாதா	த்யாக
ராஜன் பணிந்திடும்	பாதா	இந்த

மானிலந்தனி லேபிறந்திற
வாவரந்தரு வாய்பிறந்திட
வந்துநேரினு முந்தனடிதனை
வந்திக்கும் புந்தியைத் தாதா உனைச்
சிந்திக்கவே செயு நீதா

தஞ்சமாயுந்தன் கஞ்சமலர்ப்பதஞ்
சார்ந்து தரிசிக்கும் பாக்யம் பெற
நேர்ந்திடி லெற்கதே போக்யம் நறுஞ்
சாதுசண்பக மோடுசெங்கழு
நீரெனும்பல பூவினங்கொடு
சாற்றிப்பூசனை யாற்றுதலேஜன்ம
சாபல்யமான ஆ ரோக்யம் இது
வேபக்தி மார்க்கத்தின் யோக்யம்

நெஞ்சமாரவுன் செஞ்சரணந்தனில்
நேசம்வைத்தால் லவ லேசம் எமன்
வீசிடுமோ கொடும் பாசம் எந்த
நேரமுந்தவ ருமனுன்சர
ணாவிந்தம தேநினைந்திடு
நேமமோடுந்தன் நாமந்தனைச்சொன்னால்
நிச்சயம் ஞானப்ர காசம் பின்னர்
துச்சமன்றோ சொர்க்க வாசம்

பஞ்சபாதக முஞ்சங்கையாதிகள்
பார்தனிற் சூனியஞ் சல்யம் உந்தன்
பேர்சொல வாகுமே துல்யம் பல
பாவசிந்தனை யேமிகுந்தவர்
காணவுந்தகு மோசிறந்தவுன்
பாதபங்கயத் தால்வரும்பேறதைப்
பார்க்கினுமுண்டோ ப்ர பல்யம் அறி
வோர்க்கதுவாகுங் கை வல்யம்.

கலிகால வைபவம்.

பூரிகல்யாணி - ஏகம் - அல்லது திசிரம்.

1. காலம் கலி காலம் இதிற்
காண்பதிந்த்ர ஜாலம்
ஞாலமோவி சாலம் எங்கு
நடப்பதலங் கோலம்
சீலகுண நூலறிவோர்
வாலறிவி னுலிகழுங் (கா)

2. தெய்வமேப்ர தானம் எனுந்
தேவதாபி மானம்
பையப்பைய வூனம் எங்கும்
பாமரரா தீனம்
வையமுற்றிலும் உய்யவந்தருள்
செய்யுங்கடவுள் பொய்யென்றெண்ணிடுங் (கா)

3. வேதமோதல் போச்சு காம
வேதமோத லாச்சு
நீதியெலாம் பேச்சு சில
நியதிகள்மேற் பூச்சு
சூதுவித்தைக ளோதிமெத்தவுங்
காதுகுத்திதுர்ப் போதனைசெயுங் (கா)

4. ஆகமம்பு ராணம் எங்
கடைந்த தோப்ர யாணம்
யூகர் சிலர் நிர் மாணம் செய்த
யுக்தியே ப்ர மாணம்.
யோக ஞான நூல் குறைந்தது
யூக ஞான நூல் நிறைந்தது

5. ஜாதி மத பேதம் எல்லாம்
ஸமரஸம்அ பேதம்

வாதமோப்ர மாதம் அதில்
வருவதோவி ரோதம்
சாதனைப்பிடி வாதமுற்றகு
ரோததர்க்கவி நோதஜுர்ச்சனர் (கா)

6. சூதர் ஒருவர் போனார் இன்று
சூதர் பற்பலர் ஆனார்
போகர் ஒருவர் போனார் இன்று
போகர் பற்பலர் ஆனார்
வியாசர் நாரதர் இருவ ரேகினார்
வியாசர் நாரதர் பலரா யாகினார் (கா)

7. கற்பதோவே தாந்தம் மாதர்
கற்புக்கிவன் காந்தம்
நிற்பதோசித் தாந்தம் தீய
நினைவெலாம் ஏ காந்தம்
விற்பன விதாண தற்புகழ்
கற்பனை மொழிபுகல் அற்பர்கள் (கா)

8. பலவகையான நூலே கற்றுப்
பகுத்தறிந்தவன் போலே
உலகனுபவத் தாலே ஏதும்
உரைப்பர் வெள்ளறி வாலே
அலகிலா தவின் னுலகிலுஞ் சென்று
கலகமூட்டிடுஞ் சிலர் தமக்கிது (கா)

9. வேடமோ வை தீகம் அவர்
விருப்பம் இந்த்ர போகம்
பாடமோ நிர் மோகம் பணம்
பறிக்கப் பற்பல யூகம்
நாடும் விண்ணவர் நாடுங் கைவந்து
கூடினும் பெரும் பாடு பட்டிடுங் (கா)

10. போலித்தன நேசம் எங்கும்
பொய்யர் ஸஹ வாசம்

மேலுக்கேவிச் வாசம் அதை
விளம்பினாலோ மோசம்
சிலவந்தர்கள் போல வந்துமுன்
னாலேபேசிபின் னாலே யேசிடுங் (கா)

11. தன்னைத்தானே போற்றி மிகத்
தன்பெருமையை யேற்றி
அன்னியரைத் தூற்றி இந்த
அவனியை ஏ மாற்றி
மன்னருந் தனை யன்னவரால
ரென்னவேசொலித் தன்னலம் பெறுங் (கா)

12. வானைவில்லாய் வளைப்பார் சிலர்
மணலைக்கயிறாய்த் திரிப்பார்
கானலைக்குடம் அடைப்பார் சிலர்
ககனப்பூவை எடுப்பார்
ஆனையைப் பற்றியோர் பானைக்குள் நுழைப்பர்
அருமுயற் கொம்பை விரைவி லழைப்பர். (கா)

13. வார்த்தை மாத்திரங் கரும்பு அவர்
மனத்தைப் பார்த்திடில் இரும்பு
சீர்த்திப் பொருளைத் துரும்பு எனச்
செப்பிச் சேர்ப்பதிற் சுரும்பு
நேர்த்தி யானவே தார்த்தம் பேசிடுந்
தூர்த்தராம் ஜீவ னார்த்த மூர்த்திகள். (கா)

14. அகத்தில் வஞ்சகம் தரித்து நல்ல
அன்பர்போ லனு சரித்து
முகமலர்ச்சி யாய்ச் சிரித்து நீதி
முறையெ லாஞ்சொல்லி விரித்து
மிகுத்த தானவுட் பகைத்தனஞ் செய்து
நகைத்து நல்லோரை திகைத்திடச் செய்யும் (கா)

15. நல்லார் மொழியைத் தழுவார் மட
நல்லார் மொழியை வழுவார்
கொல்லா விரத மொழிவார் தினங்
குருதி மாரி பொழிவார்

எல்லா நீதியுஞ் சொல்லாற் சொல்லுவார்
நல்லாவைக் கொன்று சுல்லாய் தைத்திடுங் (கா)

16. தாய்க்குப்பிள்ளை வி ரோதி தந்தை
தனக்கிவன் ப்ரதி வாதி
வாய்த்தபந்து மித் ராதி பொருள்
வழக்கிடுத ல நீதி
தீக்குண முறு மூர்க்கர் செல்வீக
வாழ்க்கை யொடுசெல் வாக்கு டன்வாழுங் (கா)

17. தமையன் தங்கக் கம்பி நல்ல
சாந்த முடைய நம்பி
அமையு மவனின் தம்பி இந்த
அண்டம் புரட்டும் வம்பி
சமையம் பார்த்துத் தமையன் தலையில்
இமய மலையைச் சுமையா யேற்றுவான். (கா)

18. தம்பி யண்ணனை வணங்கான் அந்த
தமையன் தம்பியை யிணங்கான்
வம்பிற் சென்றிட வுணங்கான் தீய
வழிக்குச் சற்றும் பிணங்கான்
தம்பி தமையன் சோதர ரானவர்
அம்புவி தனில் வானவர் தானவர். (கா)

19. மனைவி வார்த்தை வேதம் அவள்
வைவ தாசீர் வாதம்
அனுதின மவள் பாதம் பணிந்
தடைகுவன் ப்ர ஸாதம்
வனத் தரக்கிய ரினத்தினர் சிலர்
சினத் துறுமிடுங் குணத்தினர் சிலர் (கா)

20. ஒருவ னடையுந் துன்பம் மற்
றொருவனுக் கதே இன்பம்
ஒருவ னடையும் லாபம் மற்
றொருவனுக் கதில் தாபம்
ஒருவன் செழிக்க ஒருவன் பழிக்கும்
ஒருவன் சுகிக்க ஒருவன் பகைக்கும் (கா)

21. ஒருவர்க் கோருப காரம் செயில்
உடன்செய்வ ரப காரம்
அருமை மொழிய பாரம் பொருள்
அபகரிக்க வி சாரம்
தருவ தாயிடிற் பெருமை பேசுவர்
தருவ தில்லையே னுடனே யேசுவர் (கா)

22. அறஞ் செய்வதிலே வெறுப்பு அதை
யழிக்கவோ தலைப் பொறுப்பு
மறஞ்செயச் சுறு சுறுப்பு நீதி
வழக்கிவனொரு மறுப்பு
திறமா யோந்தியி னிறம்போல் மாறுவர்
நிறையக் காணினுங் குறையாய்க் கூறுவர் (கா)

23. கொடுப்பதென்றால் கஷ்டம் எதுங்
கொள்வதென்றால் இஷ்டம்
படிப்ப தெல்லாம் சட்டம் தினம்
பண்ணுவதோ கொட்டம்
அடுத்துக் கெடுக்குந் துடுக்கர் இடுக்கண்
தொடுக்கு மிடுக்கர் தமக்கு நடக்குங் (கா)

24. தனிகரோ பல கோடி ஏழை
தவிப்பதுந் தெருக் கோடி
அனமென் றொருவர் நாடி வரில்
அடைப்பர் கதவை மூடி
கனவிற் றந்ததைக் கணக்கிற் றீட்டுவார்
கனத்த வட்டிக்கும் வட்டியைக் கூட்டுவார் (கா)

25. சிலர்க ளுண்டு லோபி தொட்டுத்
தெறித்திடா ப்ர தாபி
சிலர்க ளுண்டு பாபி தீமை
செய்வதில திவி யாபி
சிலர்க ளடங் கிடாத கோபி
சிலர்க ளுயிரைக் கொல்லு நாபி (கா)

26. இரங்கி யீவதைத் தடுப்பார் ஈயு
மிரக்க மனத்தைக் கெடுப்பார்

தாமறியாமற் கொடுப்பார் ஏழைச்
சனங்களைச்சிடு சிடுப்பார்
பொருந்தும் யாசகர் அருந்திடும்படி
தருந்தன்மையுள்ளார் வருந்தி நொந்திடுங் (கா)

27. பணத்துக்கே பெரு மதிப்பு அவர்
பகர்மொழிச்சட்டப் பதிப்பு
குணத்துக்கோ அவ மதிப்பு அவர்
குறையைச் சொல்வதே திதிப்பு
பணமிருந்திடிற் பாதாளம் பார்க்கலாம்
பாரமானவட மேருவைப் பேர்க்கலாம் (கா)

28. பொருளுக் கெதிலுந் துணிவார் வரும்
புகழு மிக்குழும் அணிவார்
கரும நோக்கிப் பணிவார் சிலர்
காலம் நோக்கித் தணிவார்
ஒருவர்க் கொருவர் புரியுந் தீமையர்
ஒருவர்க் கொருவர் மிகும் பொறுமையர். (கா)

29. அலைமகளருள் உடையார் சிலர்
கலைமகளருள் அடையார்
கலைமகளருள் உடையார் பலர்
அலைமகளருள் அடையார்
அலைமகள் கலைமகள் இருவரும்
நிலையுறப் பெறவிலை யொருவரும் (கா)

30. பாத்தை யளிக்கும் போகம் சிவ
பாத்தை யடைந்த போகம்
தருவதி லவர் மேகம் இவர்
தருவதவர்க்கு மேகம்
பெருத்தத் தனத்தைக் காத்திற் கொடுப்பார்
பெருத்தத் தனத்தைக் காத்திற் கொடுப்பார் (கா)

31. குலமகள் தனை விடுப்பார் பெருங்
குவியற்பொருளை யெடுப்பார்

விலைமகள்தனை யடுப்பார் அவர்
விரும்பியபடிக் கொடுப்பார்.
குலமகள் சிலர் விலைமக ளானார்
விலைமகள் பலர் குலமக ளானார் (கா)

32. பதத்தினணியைச் சலிப்பார் அதைப்
பார்ப்பவருஞ் சஞ் சலிப்பார்
நிதியைப்பெறவஞ் சலிப்பார் தரு
நிலையில்லார்தனைச் சலிப்பார்.
நிதம் பத்துப்பண வரவைக்காட்டுவர்
நிதம் பத்துப்பண வரவையீட்டுவர் (கா)

33. தானும் பகுத்துப் பாரான் பிறர்
சாற்று மொழியை யோரான்
ஈன வழக்கில் தோரான் வரும்
இடரென முனந் தோரான்
மான மென்பதை யடுத்தவர் சிலர்
மான மென்பதை விடுத்தவர் பலர். (கா)

34. சிலர்க்குத் துரப்பி யாசம் இன்னுஞ்
சிலர்செய்கை யா பாசம்
சிலர்கள்பெரும் பி சாசம் இன்னுஞ்
சிலரைச் சொல்லப்ர யாசம்
சிலர்கள் திருடர் சிலர்கள் முறடர்
சிலர்கள் மிடியர் சிலர்கள் கொடியர். (கா)

35. மேலெவர் கீ ழெவரோ யாரு
மேலவ ரென் பவரோ
மேலவர் கீ ழவரோ கீழ்
மேலவ ரா குவரோ
மேலவர் கீழவரை யடுக்கும்
கீழவர் மேலவரை யடக்கும். (கா)

36. கல்வி வான்கள் அருமை தனைக்
காண்பவர் களும் அருமை

கல்வி கற்பதே திறமை யெனக்
கருதுவ துண்டோ முறைமை
கல்வி கற்றவர் கண்டபய னில்லை
கல்வி யற்றவர் காணுத தொன்றில்லை (கா)

37. ஒருவர் புகழிற் புகழ்வார் மற்
றொருவர் இகழில் இகழ்வார்
இருவி தத்தையும் அறியார் அதின்
ஏற்றந் தாழ்ச்சி குறியார்
அரிய வித்தைக ளெங்கு மறைந்தது
அறிபவர்க் கேற்ற வித்தை நிறைந்தது. (கா)

38. இன்னும் உண்ட னேகம் அவை
யியம்பிடிற் ப்ர வாகம்
மன்னு மிவ்வனு போகம் எங்கு
வழங்குதே பூ லோகம்
முன்ன மிருந்த முறைகள் நீங்கிற்று
முறையல் லாதன முறைகள் ஓங்கிற்று. (கா)

39. அவரவர்களின் விதியே வென
அறிவதோ வென்ன மதியே
பவமகற்றிடும் பதியே குரு
பரம கருணு நிதியே
எவரினி யிந்த யிடரை நீக்குவார்
இப்பழியையுனை யன்றியார் போக்குவார் (கா)

40. ஞானமார்க்கம் பெருக உனை
நண்ணித் துதித்து வுருக
ஈனமார்க்கங் கருக பே
ரின்பம் யாரும் பருக
தீன ரக்ஷண தக்ஷிணு மூர்த்தியே.
திருவருள் புரிவாய் மிகு கீர்த்தியே (கா)

லாவணி.

திருவாரூர் வன்மீக புரத்திற் றிகழுங்குரு நாதன் இந்த
ஜெகத்தினில் மிகுந்தநல் மகத்துவ முடையபரக் யாதன்
உருவான மானிடர்க்குத் திருவருள் புரியும்வி நோதன் அந்த
ஒருபரம் பொருள்தனை யறிவினி லறிசிவ போதன்

யோக மார்க்க ஞானசு—சீலன்
த்யாக ராஜனுக் கனு—கூலன் இந்த
உலகமீதிலே—கலியின் சூதிலே
இலகி யருளுந் திருக்—கோலன் (திரு)

வாணாள் முழுக்கவேன் வீணாய்க் கழிக்கிறாய் மனமே ஒரு
வழிபுக லுவனதைத் தழுவிடி லுனக்கது கனமே
காணாப் பொருள தனைக் கண்டாற் போலவே தினமே நீ
கண்ட காக்ஷி சுகம் இரவிற் கண்டசொப் பனமே.

கருமத்தா லெடுத்தோ மிந்த தேகம்
கானல் நீர் தீர்க்குமே தாகம்ா மதி
கலையாதே—எதும்—நிலையாதே— வீணா
யலைவது நம் அவி வேகம் (திரு)

போனாற் போகுதினி மேலாவது குருவைத் தேடு ஒரு
பொழுது மறவாதருள் பொழியு மவர்சன்னிதி நாடு
தானாய்ச்செய்த குற்றங்கள் நானாவிதமும் உரை யாடு மலர்ச்
சரண பத்தியாற் றிரிகரண சுத்தியாய்த் துதி பாடு

தணல தின்மெழுகாயுளம்—உருகும்
ததும்பியே வானந்தக் கண்ணிர் பெருகும்—அருள்
சார்ந்திடுமே வினை தீர்ந்திடுமே வரும்
ஜனன மாண பவங் கருகும் (திரு)

எல்லாம் வல்ல குரு வல்லா லெதுவுங் கிடைக் காது அவர்
இணைமல ரடிதனைத் துணைகொளு மவர்க்கரி தேது
பொல்லாச் சூனியங்கள் பூதசங்கைகளண் டாது உடல்
பொருந்தும் பிணிகளெதும் வருந்திட விடர்கள்செய் யாது

புகழ் முதற் பதினாறு பேறும்
மகிழ்வதாய்ப் பொருந்திதினந் தோறும்
வாழ்ந்திடவே இன்பம் சூழ்ந்திடவே நல
மருவியே சுகம் வளர்ந் தேறும் (திரு)

வாழி விருத்தம்.

சீர்பெருகு வேதாகமங்கள் வாழிச்
சிவபெருமான் றிருவருளுஞ் சிறந்து வாழிப்
பேர்பெருகு சைவமதப் பெருமை வாழிப்
பேறளிக்கு முத்தமிழும் பெருகி வாழிப்
பார்பெருகு நற்கமலைப் பதியும் வாழிப்
பகர்தக்ஷி ணாமூர்த்தி பாதம் வாழி
ஏர்பெருகு மிந்நூலெந் நாளும் வாழி
யிதைப்படிக்கு மெல்லோரும் வாழி மாதோ.

கருணாநிதி துணை.

ஸ்ரீகுரு தக்ஷிணாமூர்த்தி ஷோடச கலாமாலை

முற்றிற்று.

சுபம் ! சுபம் !!

சுபம் !!!

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE, MADRAS. S. E.,